**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 104/2022**

**நாள்: 03.12.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 24 (LW18)

2025 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 03 ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | காளீஸ்வரி | தொழில் | |
| கணவர் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

(A3 ஆஜர். A1, A2, A4 to A7 ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது ஈரோட்டில் குடியிருந்து ஹோட்டலில் வேலை பார்த்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன கருப்பையாவை எனக்குத் தெரியும். அவரது மனைவி வளர்மதியை எனக்குத் தெரியும். இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட யாரையும் எனக்குத் தெரியாது. எதற்காக கொலை செய்தார்கள் என்றும் எனக்குத் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள். அப்போது இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது என்றுதான் சொன்னேன்.



MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.12.03 16:02:33 +0530

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய Sec.154 of Indian Evidence Act ன் படி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**<u>அரசுத் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என்னை போலிசார் விசாரித்த போது, எனக்கு கடந்த 26.05.2021ம் தேதியன்று என் செல்போனிற்கு 638038026 என்ற எண்ணிலிருந்து அழைப்பு வந்ததாகவும், நான் யார் என்று கேட்டபோது, அந்த நபர் தான் தரைக்குடியில் இருந்து பேசுவதாக சொன்னார் என்றும், நான் என்ன வேண்டும் என்ற கேட்டபோது, அந்த நபர் நீதான் வேண்டும் என்று சொன்னதால் நான் உடனே போனை கட் செய்துவிட்டு இந்த தகவலை எனது அண்ணன் பிரபுபாண்டியிடம் சொன்னேன் என்று போலிசாரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

உடனே எனது அண்ணனும், ஊர்க்காரர்களும் அவ்வாறு போன் செய்தவரை நேரில் வரவழைத்து பிடிப்போம் என்று சொல்லி, மறுமுறை போன் செய்த போது, எங்கள் ஊர் கண்மாய்க்கரைக்கு வரச்சொன்னோம் என்றும், நானும் எனது அண்ணனும் அந்த இடத்திற்கு போய் இருந்தோம் என்றும், அப்போது அங்கு வந்த ரமேஷ்குமார், எனது வலதுகையை பிடித்து, செடிக்குள் இழுத்து சென்றார் என்றும், அப்போது அங்கிருந்த கருப்பையா மற்றும் எனது அண்ணன் பிரபுபாண்டி மற்றும் எனது ஊரை சேர்ந்தவர்களும் மேற்படி ரமேஷ்குமாரை எங்கள் ஊருக்கு அழைத்து வந்து அவரை அடித்து விசாரித்ததில் வந்தவர் கீழநரியன்குளத்தை சேர்ந்த ரமேஷ்குமார் என தெரிந்து கொண்டோம் என போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

மேற்படி ரமேஷ்குமார் நடந்த சம்பவம் குறித்து மன்னிப்பு கேட்டதால், அவரை மன்னித்து விட்டுவிட்டோம் என்றும், கடந்த 07.06.2021ம் தேதியன்று எனது அண்ணன் புனவாசல் கிராமத்திற்கு சென்று திரும்பி வரும்போது, 1ம்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.12.03 16:02:36 +0530

எதிரி ரமேஷ்குமாரும் அவருடன் வந்த மற்றொரு நபரும் எனது அண்ணனை வழிமறித்து உன்னையும், உன் தங்கச்சியையும் கொல்லாமல் விடமாட்டோம் என்று சொல்லி அருவாளால் எனது அண்ணனை வெட்ட வந்த போது, எனது அண்ணன் அங்கிருந்து தப்பித்து, நடந்த சம்பவம் பற்றி என்னிடம் சொன்னதன் அடிப்படையில் நானும் எனது அண்ணனும் கடந்த 07.06.2021ம் தேதியன்று மண்டலமாணிக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றும், அதன் பேரில் மனு ரசீது எண்.37/2021 கொடுத்தார்கள் என்றும், இந்த சம்பவம் சம்மந்தமாக மண்டலமாணிக்கம் போலிசார் என்னையும், 1வது எதிரி ரமேஷ்குமாரையும் அழைத்து விசாரணை செய்தார் என்றும், 1வது எதிரி ரமேஷ்குமார் எங்களிடம் மன்னிப்பு கேட்டு,இனிமேல் என்னிடமோ, எனது உறவினரிடமோ பிரச்சனை செய்யமாட்டேன் என சொன்னதால் நாங்கள் கொடுத்து மனு மீது நடவடிக்கை வேண்டாம் என்று எழுதிக்கொடுத்துவிட்டு வந்துவிட்டேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

மேற்படி சம்பவத்திற்கு தொடர்ச்சியாக 14.06.2021ம் தேதி எங்கள் ஊரை சேர்ந்த முத்துராஜ், ரமேஷ், மூர்த்தி, ஸ்டாலின் ஆகிய நால்வரும் காத்தவராயன் கோவிலிற்கு சென்று திரும்ப வரும் போது, எதிரிகள் ரமேஷ்குமார், பசுபதி பாண்டியன், தமிழ்செல்வன், வினோத் பாண்டியன் என்ற வினோத்குமார் ஆகியோர் வழிமறித்து அவர்களை மிரட்டியதாகவும், அது சம்மந்தமாக முத்துராஜ் என்பவர் மண்டலமாணிக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக நான் கேள்விப்பட்டேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

என்னை கையை பிடித்து இழுத்தது சம்மந்தமாக ரமேஷ்குமார் என்பவரை எனது மச்சான் கருப்பையா மற்றும் ஊர்க்காரர்கள் கேட்டது சம்மந்தமாக முன்விரோதத்தில் எனது மச்சான் கருப்பையா, இந்த வழக்கில்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.12.03 16:02:39 +0530

எதிரிகள் கொலை செய்ததாக கேள்விப்பட்டேன் என போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. போலிசார் மேற்சொன்னவாறு சொல்லிவிட்டு, தற்போது உண்மையை மறைத்து மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.12.03 16:02:42 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .